# பாலதீபம்

சைவத்தமிழ் மணம் கமழ்ந்த சாமிப்பூவொன்று இன்று
தெய்வத்தின் திருவடியில் திகழ்கின்றது





மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறு படைத்த
மூத்த சைவத்தமிழ் ஆர்வலர்

அமரர்

**உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி (பாலு) அவர்களின்**

**நீங்காத நினைவுகளாய் மலரும் பாலதீபம் நினைவு மலர்**

22.12.2019

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

சீரோடும் சிறப்போடும் நாம்வாழ வழிகாட்டி
தேரோடும் வீதியிலே இறையோடு கலந்திட்ட
எமது அன்புத் தெய்வம் குடும்பத்தின் தலைவர்
அமரர்
உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின்
திருப்பாத கமலங்களிற்கு இம்மலர்
சமர்ப்பணமாகுக.!

குடும்பத்தின் தலைவரென நெடுநாளாய்த் தானிருந்து
கடும் உழைப்பால் கைமெலிந்து களபணிகள் தான்படைத்து
நெடுமன்பால் எமையெல்லாம் நேர்சீராய் வாழவைத்த
கொடுத்து நாம் வைத்த எங்கள் கிருஷ்ணசாமிப் பெருந்தலைவர்
விடும்தூதை இறைவிடுக்க விரைந்தவரை அடைந்திடநாம்
படும்துயரில் பறித்தெடுத்த நினைவுகளைக் கோர்த்தெடுத்தோர்
நெடுமலரை ஆக்கியே தூயோன்தன் பாதமதில்
இடுகின்றோம் இது அவர்க்குத் திருப்பாத சமர்ப்பணமே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்

"தந்தையைப் போலொரு தெய்வமில்லை அவர் சொற்படி நடந்திடில் துயரமில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சைவத்தமிழ் ஆர்வலர்
அமரர்
உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்கள்

குள்ளமான தோற்றமது குன்றெனவே உயர்ந்த எண்ணம்
கள்ளமற்ற புன்சிரிப்பு கடகடென்று பேசும் பாங்கு
துள்ளியோடும் சுறுசுறுப்பு தூயவெண்ணீறணிந்த மேனி
அள்ளித்தனை அலங்கரித்தார் கிருஷ்ணசாமி இவரேகாண்.

அன்னையின் அரவணைப்பில்
10
01
1948



தெய்வத்தின் திருவடியில்
22
11
2019

அமரர்
உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின்
தெய்வீக ஆத்மாவை நாம் ஆண்டாண்டு தோறும் போற்றிப் பூசிப்பதற்கான

திதி வெண்பா

கிருஷ்ணசாமி என்றதொரு திருமகனார் மண் பிறந்து
பெரும்பணிகள் பலதினொடு இல்லறமும் தான் முடித்து
வருவிருந்து இறைக்காகி அருவடிவாய் ஆனதிதி -தமிழ்ப்
பருவத்துயர் கார்த்திகை அபரபட்ச தசமியாம் என்றே துதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வெட்டு

ஒருவர் எங்களோடு இருக்கின்றபோது நாங்கள் அவர் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு வாழ்கின்றோம். ஒருவேளை அவர் நோய்வாய்ப்பட்டாலும் அவர் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு வாழ்கின்றோம். ஒருவேளை அவர் வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டிருந்தால் வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அவர் எங்களோடு இருக்கின்றார் என்ற திருப்தியோடு வாழ்கின்றோம். காலத்தால் அவர் அமரத்துவம் அடைந்துவிட்டால் அமரத்துவம் அடைந்துவிட்டாலும் உடல் எங்களோடு இருக்கின்றது என்ற திருப்தியோடு வாழ்கின்றோம். அவ்வுடலை இறுதிக் கிரிகையின் ஊடாகத் தகனம் செய்துவிட்டால் அவருடைய அஸ்தி எங்களோடிருக்கின்றது என்ற திருப்தியோடு வாழ்கின்றோம். அந்த அஸ்தியைக்கூட அந்தியேட்டி என்கின்ற கிரிகையினூடாகத் தகனம் செய்துவிட்டால் இருப்பவர்களுக்கு இல்லாதவர்களின் எச்சமாகக் கிடைப்பது அவருடைய நினைவுமலர் என்று சொல்லப்படுகின்ற கல்வெட்டேயாகும். இருப்பவர்களுக்கு இல்லாதவர்களின் வெற்றிடத்தை நிரப்பிக் கொடுப்பதும் இக் கல்வெட்டேயாகும். கல்வெட்டு என்றால் என்றும் அழியாமல் இருப்பது என்பது பொருளாகும். மனித வாழ்க்கை என்பதுவும் அவ் வாழ்க்கையின் வரலாறு என்பதுவும் காலங்காலமாக இருப்பவர்கள் மத்தியிலே என்றும் அழியாமல் இருக்க வேண்டும். வாழ்ந்தவர்களுடைய வரலாறுகள் வாழ்பவர்களுக்கு ஓர் வழிகாட்டியாகும். அந்த வகையிலே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த அமரர் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களுடைய வாழ்வியல் வரலாறும் வாழ்பவர்களுக்கு ஓர் வழிகாட்டியாகும். அதனால் அவருடைய வாழ்வும் வரலாறும் என்றும் அழியாத கல்வெட்டாக நின்று நிலைப்பதாக.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின்

ஆத்மீக பயணத்திற்கு வழித்துணையாக

அவருக்குப் பிரியமான பஞ்சபுராணம் ஓதுவோமாக.!

# பஞ்சபுராணம் ஓதுவோமாக!



வதிரன் புலோவானை வானோர் தலைவனை
உதிரம் சொரிந்தெங்கள் உழுநிலத்தில் எழுந்தோனை
முதிர் ஞானப் பக்திகொண்டு முன்வந்து தொழுவோர்க்கு
எதிலுமே வெற்றி வரும் எடுத்ததெல்லாம் சித்திதரும்!

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து!

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
நாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரனை சங்கவெண் குளையோர் காதில்
கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பனஆகாதே
காரிகையார்கள் தம்வாழ்விலெம் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியாமலர் பாதமிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோடாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டினன் நாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன்வந்து வெளிப்படும் ஆயிடிலே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர்தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்கவென்றார்

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரிபோர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியதனாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் அருளிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்தபோதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேறும் புயமிசை மேவிய பெருமானே.

திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

## பற்றற்ற மாலை

ஊர்விட்டு ஊர்வந்து வாழ்ந்தாலும்
பார்தொட்டுப் பலதேசம் பறந்தாலும்
வேர்விட்டுக் கூர் கொண்டு குடைந்தாலும்
ஓர் உயிரும் உனக்கென்றும் சொந்தமில்லை!

(நாமும் நமதும் ஆண்டவன் சொத்து
அவனருள் ஒன்றே எமக்கரும் சொத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பசுவாமிகள் தோத்திரம்

ஏழையென்ற பேதமில்லை எங்க சாமிக்கு
எல்லோரும் ஒன்றேதான் எங்க சாமிக்கு
கற்றவரும் மற்றவரும் எங்க சாமிக்கு
கனிவுடனே தவமிருப்பார் எங்கசாமிக்கு
உடலும் மனமும் சுத்தமாக எங்கசாமிக்கு
உறுதியுடன் இருக்க வேண்டும் எங்கசாமிக்கு
விரதம் என்றால் தனி விரதம் எங்கசாமிக்கு
விதி என்றும் அதிகமையா எங்கசாமிக்கு
மகுடம் என உயர்வு பெற எங்கசாமிக்கு
மணிமாலை அணிய வேண்டும் எங்கசாமிக்கு
கறுப்பு வேட்டி கட்ட வேண்டும் எங்கசாமிக்கு
காலமெல்லாம் தவமிருக்கும் எங்கசாமிக்கு
இருமுடியை ஏந்தவேண்டும் எங்கசாமிக்கு
திருவடியை வணங்கிடவே எங்கசாமிக்கு
காடுமலை ஏற வேண்டும் எங்கசாமிக்கு
கானகமும் வழிவிடுமே எங்கசாமிக்கு
பணிவுடனே வேண்டி நின்றால் எங்கசாமிக்கு
பாவமெல்லாம் பறந்தோடும் எங்கசாமிக்கு
தேவை என்ன தேடிவரும் எங்கசாமிக்கு
தேவரெல்லாம் அடிபணிவர் எங்கசாமிக்கு
அகந்தையினை அழித்திடவே எங்கசாமிக்கு
அனுதினமும் பணிந்திடணும் எங்கசாமிக்கு
சுகம் பெறவே துணை வரணும் எங்கசாமிக்கு
சுத்தமான இதயம் வேண்டும் எங்கசாமிக்கு
பதினெட்டுப் படி காணும் எங்கசாமிக்கு
படிப்படியாய் ஏற்றிவிடும் எங்கசாமிக்கு
முடிதொட்டுப் பாதம்வரை எங்கசாமிக்கு
முழுவடிவம் அருள்வடிவே எங்கசாமிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யின்றி மெய்யோடு

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரியில்
ஐயனை நீ காணலாம்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நாடு அவன் புகழ் பாடு
புகளோடு வாழ வைப்பான் ஐயப்பன்
உன்னைப் புகளோடு வாழ வைப்பான் ஐயப்பன்
இருப்பது காடு வணங்குது நாடு
அவனைக் காணத் தேவை பண்பாடு

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (பொய்யின்றி)

பூஜைகள் போடு தூய அன்போடு
பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்
நல்ல பெயரோடு வாழ வைப்பான் ஐயப்பன்
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்
அருள் வேண்டும் அன்பரையெல்லாம் வாழ வைப்பான்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (பொய்யின்றி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத காவியமாகிவிட்ட அமரர் உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் வாழ்வியல் வரலாற்றுச் சுருக்கம்

மூத்த விநாயகரும் முத்துக்குமார சுவாமிகளும் அழகொளிர அருகருகே அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்ற மூளாயம்பதியிலே அக்காலத்திலே சீரோடும் சிறப்போடும் பேரோடும் புகழோடும் வாழ்ந்தவர்கள் அமரர்களான சரவணமுத்து இலட்சுமியார் தம்பதிகளாவார். சரவணமுத்து இலட்சுமியார் தம்பதியர்கள் இல்லறத்தை நல்லறமாக்கி இனிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டு அருகாக அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்ற வதிரன்புலோச் சித்திவிநாயகப் பெருமானுக்கும் முத்துக்குமார சுவாமிகளுக்கும் மற்றவர்கள் மெச்சும்படியான அருட்தொண்டுகள் புரிந்து வருகின்ற காலத்திலே இவர்களுக்கு எல்லாச் செல்வங்கள் வளங்களோடும் செல்வத்துட் செல்வமான பிள்ளைச் செல்வங்களான மூவர் பிறந்தார்கள். அந்த மூவருக்கும் பெற்றோர்கள் தில்லையாச்சி என்றும் கிருஷ்ணசாமி யென்றும் விசாலாட்சியென்றும் இனிய பெயர்கள் சூட்டிப் பற்றோடும் பாசத்தோடும் வளர்த்து வந்தார்கள். இந்த மூன்று பிள்ளைச் செல்வங்களுள்ளேயும் நாம் இங்கே வாழ்க்கை வரலாற்றை நோக்குகின்ற அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் சரவணமுத்து இலட்சுமியார் தம்பதியர்களுக்கு இரண்டாவது பிள்ளையும் மகனுமாகப் பிறந்தார்.

அமரர்களான சரவணமுத்து இலட்சுமியார் தம்பதியர்களுக்கு மூத்தபிள்ளை பெண்பிள்ளையாக இருந்தமையினாலே தங்களுக்கு ஒரு ஆண் பிள்ளை வேண்டுமென்று மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகப் பெருமானையும் முத்துக்குமார சுவாமிகளையும் வேண்டி அதன் விளைவாக சரவணமுத்து இலட்சுமியார் தம்பதியர்களுக்கு இரண்டாவது பிள்ளையாகவும் ஆண்பிள்ளையாகவும் அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் 10.01.1948ல் பிறந்தார். தங்களின் விருப்பப்படியே தங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பிள்ளை பிறந்தமையால் அவருக்கு கிருஷ்ணசாமி என்று பெயர்சூட்டி அன்போடும் பாசத்தோடும் பெற்றோர்கள் வளர்த்து வந்தார்கள். அமரர் கிருஷ்ணசாமி அவர்களும் குழந்தைப் பருவத்திலேயே பல அபார ஆற்றல்கள் கொண்டவராக வளர்ந்து வந்தார். மகனிடத்திலே காணப்பட்ட அபார ஆற்றல்களை அவதானித்த அவரின் பெற்றோர்கள் அவரைக் கல்வியிலே வல்லவராக்க வேண்டுமென்ற முனைப்போடு அக்காலத்திலே சிறந்து விளங்கிய கல்விக்கூடமான மூளாய் அமெரிக்கன்மிஷன் பாடசாலையிலேயும் பின்னால் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திலேயும் சேர்ந்து நல்ல ஆரோக்கியமான அடிப்படைக் கல்வியை போதித்தார்கள்.

நல்ல அடிப்படைக் கல்வியைப் பெற்றுக் கொண்ட அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் மேலும் மேலும் படிக்க வேண்டும் என்று விருப்புற்று இடைநிலைக் கல்விக்காக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே சேர்ந்து சிறந்தமுறையில் திறமையோடும் அக்கறையோடும் கல்வியை மேற்கொண்டு வந்ததோடு எல்லாத் துறைகளிலேயும் சிறப்புற்று விளங்கித் தனக்கும் தன் பெற்றோருக்கும் தான் படித்த பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்துக் கொடுத்தார். பின்னர் இவரிடம் காணப்பட்ட தமிழ் ஆற்றலினையும் சைவப்பற்றையும் அவதானித்த ஆசிரியர்களும் பெரியோர்களும் இவரை பாலபண்டிதர்க் கல்வியை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தவே அவரும் அதற்கு இசைந்து பாலபண்டிதர்க் கல்வியை மேற்கொண்டு வந்தார். கல்வியிலே சிறப்பாக விளங்கினாலும் குடும்பநிலைமை அவர் கல்வியைத் தொடர இடம் கொடுக்கவில்லை என்றே கூறிவிடலாம். ஒரேயொரு ஆண்மகனாக குடும்பத்தில் இருந்தமையால் தாய் தந்தையர்கட்கு உதவுவதற்காகவும் சகோதரிமாருக்கு உதவுவதற்காகவும் பாலபண்டிதக் கல்வியை சிலபடிமுறைகளோடு நிறுத்திக் கொண்டு ஒரு வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கிருஷ்ணசாமி அவர்களிடம் காணப்பட்ட தமிழ் ஆற்றலும் சைவப்பற்றும் அவருக்குக் கைகொடுத்தது. அவரை தினசரிப் பத்திரிகை நிறுவனமொன்று பெருவிருப்போடு வேலைக்கு அமர்த்தியது சிறிது காலம்

அப் பத்திரிகை நிறுவனத்திலே கடமையாற்றிய அமரர் அவர்கள் கொடுக்கின்ற ஊதியத்தைக் கொண்டு குடும்ப கஸ்ரத்தைப் போக்க முடியாமையாலும் விவசாயத்துறையிலே ஈடுபாடு கொண்டவராகவும் பத்திரிகை நிறுவன வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு முற்றுமுழுதாக விவசாயத்துறைலே ஈடுபட்டு பெருவருமானமீட்டி குடும்ப கஸ்ரத்தைப் போக்கினார். இவ்வாறு விவசாயத்துறையிலே ஈடுபட்டு பெருவருமானம் ஈட்டிக்கொண்டிருந்த அமரர் அவர்கள் சகோதரிமார்கள் இருவரும் திருமணம் செய்து சிறப்புற்று வாழவே பொறுப்புக்களைக் குறைத்துக் கொண்டு பெற்றோர்களதும் உற்றார் உறவினர்களதும் விருப்பப்படியும் தன் விருப்பப்படியும் இல்லறத்தில் கால்பதிக்கச் சித்தமானார்.

இல்லறத்தில் கால்பதிக்கச் சித்தமான அமரர் அவர்கள் தனக்கு எல்லா வகையிலேயும் பொருத்தமான அன்போடும் பண்போடும் அமைதியோடும் வாழ்ந்துவந்த கனகசபை சின்னப்பிள்ளை தம்பதியர்களின் ஏகப்புதல்வியும் முறை மைத்துணியுமான நாகேஸ்வரி அவர்களை நிச்சயித்து 1979ம் ஆண்டு வைகாசி மாதம் நல்லதொரு திருநாளிலே கிருஷ்ணசாமி நாகேஸ்வரி திருமணம் எல்லோரின் விருப்பப்படியும் மிகச் சிறப்பாக நிறைவேறியது. கிருஷ்ணசாமி நாகேஸ்வரி தம்பதியர்கள் இல்லறத்தை நல்லறமாக்கி ஒருநொடிப் பொழுதேனும் இணைபிரியாதவர்களாகவும் ஒருவர்மீது ஒருவர் அளவற்ற பற்றுக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து வரும் காலத்திலே இவர்களுக்கு வாழ்வாங்கு வாழ்வதற்குத் தேவையான எல்லா வளங்களோடும் மிகப் பெரிய செல்வங்களான பிள்ளைச் செல்வங்களாக இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களுமென நான்கு நல்மக்கள் பிறந்தார்கள். அமரர் அவர்கள் தமிழின்மீதும் சமயத்தின்மீதும் கடவுள்மீதும் கொண்டிருந்த அதீத பற்றுக் காரணமாக பிள்ளைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே கணநாதன் என்றும், வைத்தியநாதன் என்றும், விசாலாட்சி என்றும், நீலாயதாட்சி என்றும், பெயர்கள் சூட்டினார்.

பிள்ளைகளைக் கல்வி கேள்விகளிலே வல்லவர்களாக்கி ஒழுக்கசீலர்களாகவும் பண்பாளர்களாகவும் பரினமிக்கச் செய்ய வேண்டுமென விரும்பிய அமரர் அவர்கள் ஊன் உறக்கமின்றி அதற்காக அரும்பாடு பட்டார். அதிலே வெற்றியும் கண்டார். தன்னுடைய மூத்த மகன் கணநாதன் அவர்களை கல்வியிலே சிறப்புற வழிவகைகள் செய்து அவரை ஓர் பட்டதாரியாக்கியதோடு, ஓர் நீதிமன்ற உத்தியோகஸ்தருமாக்கி உயர்ச்சி கண்டதோடு அவருக்கு ஓர் நல்ல இல்வாழ்வை அமைத்துக் கொடுக்க வேண்டுமென விரும்பி ஓர் நீதிமன்ற உத்தியோகஸ்தரான கார்த்திகா அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவர்கள் உயர்வுகளோடு சிறப்புற்று வாழ மகிழ்ச்சி அடைந்ததோடு அவர்களுக்கு அவர்களின் இல்லறப் பாக்கியத்தால் கிடைத்த செல்வங்களான கரிசாந், ஸ்ரீகஜன், ஆகியோரையும் பேரப் பிள்ளைகளாகக் கண்டு மகிழ்ச்சி கொண்டிருந்தார்.

அதேபோலவே தனது இரண்டாவது பிள்ளையும் மகனுமான வைத்தியநாதன் அவர்களை அன்போடும் பாசத்தோடும் கல்வியிலே கலையிலே வல்லவராக்கி பிற நாடு சென்று தொழிலாற்ற வைத்தும் பின்னால் தன் குடும்பத்திற்கு கைகொடுத்துதவிய விவசாயத்தொழிலினையே அவரையும் ஆற்றவைத்து அவர் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியுற்று சிறந்து விளங்கும் வேளையிலே அவரையும் இல்லற பந்தத்திலே இணைத்துவிட விரும்பி உறவுக்குள்ளேயே குகாஜினி அவர்களை மணம்முடித்து வைத்து அவர்களுக்கும் அவர்களின் இல்லற பந்தத்தால் கிடைத்த செல்வமான ஸ்ரீசஸ்வினி அவர்களை பேரக்குழந்தையாகப் பெற்று பேரானந்தம் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் தனது மூன்றாவது பிள்ளையும் மகளுமான விசாலாட்சி அவர்களை அக்கறையோடும் ஆர்வத்தோடும் வளர்த்தெடுத்து கல்வியிலே வல்லவராக்கி அவர் பட்டப்படிப்பிற்குள் புகவிருந்த வேளையிலே பருவத்தே பயிர்செய் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலே அவரையும் இல்லற பந்தத்தில் இணைத்துவிட ஆர்வங்கொண்டு கனடா நாட்டிலே வாழ்ந்து கொண்டிருந்த தனது இளைய சகோதரியின் மகனான முறை மைத்துனர் மனோகரசிவம் அவர்களுக்கு மணம்முடித்து கொடுத்து அவர்கள் கனடா நாட்டிலே இன்புற்று வாழ்வது கண்டு மகிழ்ச்சி கொண்டதோடு அவர்களுக்கும் அவர்களின் இல்லற பந்தத்தில் கிடைத்த முத்துக்களான சர்மிகா, ஸ்ரீபிரமிகா, ஆகியோரையும் பேரக்குழந்தைகளாகக் கண்டு பேரானந்தம் கொண்டிருந்தார்.

இறுதியாக தனது நான்காவது பிள்ளையும் கடைக்குட்டிச் செல்ல மகள் நீலா யதாட்சி அவர்களை சிறந்த முறையிலே கல்வி கற்க வைத்து அவரையும் விவசாயபீடப் பட்டதாரியாக்கி தான் பெரிதும் விரும்பியதோர் ஆசிரியத் தொழிலிலே அமரவைத்துச் சிறப்புக்கள் அளித்ததோடு அவருக்கும் உரிய பருவத்திலே திருமணம் செய்து வைக்க வேண்டுமென பேரவாக் கொண்டு அருமையும் பெருமையும் சாந்தமும் கொண்ட சதீஸ்குமரன் அவர்களுக்கு மணம்முடித்து வைத்து அவர்கள் அன்னியோன்னியமாக வாழ்வது கண்டு பூரிப்படைந்ததோடு அவர்களுக்கும் அவர்களின் வாழ்வியல் தத்துவத்தால் கிடைத்த செல்வமான அபிநேயன் அவர்களையும் பேரக்குழந்தைகள் வரிசையிலே சேர்த்துக்கொண்டு வாழ்க்கையிலே பூரண திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார்.

இவ்வாறு அமரர் கிருஷ்ணசாமி அவர்களுடைய வாழ்வியல் வரலாறு வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்ற காலத்திலே அவர் தன் வாழ்வியலுக்கு சமாந்தரமாக ஏனைய விடயங்களான சமயம், தமிழ், என்பவற்றிலேயும் அபார வளர்ச்சி கண்டார். சமயத்தீட்சை பெற்று சிவசின்னங்களுக்கு நம்பிக்கையோடு உரிய மதிப்பளித்து வந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் சமயப் பண்டிகைகளை சரிவரக் கடைப்பிடித்து வந்தும், தெய்வீகக் கிரிகைகளிலேயும் ஆன்மீகக் கிரிகைகளிலேயும் தேவார திருவாசகங்கள் பாடியும் மெய்யுருக வைத்தார். திருவெம்பாக் காலத்திலேயே கொட்டுகின்ற மழையையும் பனியையும் பொருட்படுத்தாது ஊர்முழுவதும் சிவபெருமானை தேரிலே அமர்த்தி தேவாரம் பாடி திருவெம்பாவை பாடி, சொற்பொழிவுகள் செய்து வீதிவலம் வருகின்ற காட்சி மறக்க முடியாததாகும். அருகாமையிலுள்ள பல கோயில்களுக்கும் அவர் சென்று அங்கே அலங்காரத் திருவிழாக்களுக்கும் மகோற்சவங்களுக்கும் அந்தணப் பெருமக்களுக்கு உதவுவதோடு காலத்திற்கேற்ப பாடல்களையும் பாடி பக்திப் பெருக்கெடுக்க வைத்தார். அதுமட்டுமல்லாமல் கோயில் பரிபாலன சபை ஐக்கியநாணய சங்கம், இந்து இளைஞர் மன்றம், சனசமூகநிலையம் போன்றவற்றிலே பல பொறுப்பு வாய்ந்த பதவிகள் ஆற்றி சமூகப் பணிகளும் பல புரிந்து வந்தார். எல்லோரோடும் மிக அன்பாகப் பழகுவதிலும் அடைக்கலம் கொடுப்பதிலும் மிக்க ஆர்வங்கொண்டு விளங்கிய அமரர் அவர்கள் ஆலய உற்சவங்களிலே தன் வீட்டையே தண்ணீர்ப்பந்தலாக்கியும் அன்னதான மடமாக்கியும் சில வேளைகளில் கோயிலாக்கியும் திருத்தொண்டு களாற்றி வந்தார். அவருடைய மேற்படி செயற்பாடுகள் அனைத்திற்கும் அவரது குடும்பத்தவர்கள் அனைவருமே பூரண ஆதரவு கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு கட்டத்திலே பெருந்தொகையான நிலப்பரப்பிலே ஏர் பிடித்து உழுது விவசாயம் செய்து வண்டில் மாடு பூட்டி விளைந்த தானியங்களை ஏற்றி வந்து வீட்டு வளாகம் முழுவதும் குவித்து விவசாய மன்னன் என்ற பட்டமும் பெற்றிருந்தார். பிரதேசத்தின் பல பாகங்களிலேயும் கோடி கோடியாகக் கொட்டி வீடுகட்டிய பெரியார்கள் பலரும் கிருகப்பிரவேசத்தில் அன்று அமரர் கிருஷ்ணசாமி அவர்களை அழைத்து மனை வாழ்த்து பாடுவது அவர்களுக்கு திருப்தியைக் கொடுத்திருந்தது. திருவாசக முற்றோதுதல் பஜனைகள் நடாத்துதல், கூட்டுப்பிரார்த்தனைகள் செய்தல் அமரர் அவர்களுக்கு மிகப் பிரியமான விடயங்களாகும். பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற தத்துவத்தில் அமரர் அவர்கள் பரிபூரண வெற்றி கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஓர் முழுமை பெற்ற மானிடராகத் திகழ்ந்த அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் காலச் சூழ்நிலைகளுக்குள் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்தாலும் கடின உழைப்பின் காரணத்தாலும் சற்று நோய் வாய்ப்பட்டிருந்தார். பிள்ளைகள் மருமக்கள் போன்றோரின் உதவி ஒத்தாசைகளோடும் ஆலோசனைகளோடும் அமரர் அவர்கள் மதாமாதம் வைத்தியசாலை சென்று தன் உடலைப் பரிசோதித்து மருந்து பெற்று வந்தார். மனைவி மக்கள் மருமக்கள் அனைவருமே அமரர் அவர்களின் நலனில் அக்கறையுடையவராக இருந்தார்கள். அமரர் அவர்களுடைய நோய் அடிக்கடி அதிகரிப்பதும் குறைவதுமாகவே காணப்பட்டது அன்று திடீரென்று அமரர் அவர்களுடைய நோய் அதிகரித்துக் காணப்பட உடனடியாக அவர் யாழ் போதனா வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டடார். எல்லோருமே அவர் குணமடைந்து மிக விரைவாக வீடு திரும்ப வேண்டுமென வேண்டுதல் செய்தார்கள். யாருக்கு என்ன தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான் என்பது யாருக்குத் தெரியும். ஆனாலும் அமரர் கிருஷ்ணசாமி அவர்கள் தனக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த திகதியைச் சரியாக உணர்ந்திருந்தார். சுகம்விசாரிக்கச் சென்றவர்களிட மெல்லாம் தான் கடவுளிடம் போகப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அன்று 22.11.2019 அன்று காலை வேளை ஊர்க் கோவில் மணிகளொன்றும் ஒலிக்கவில்லை புள்ளினங்கள் தம் ஆரவாரத்தை ஒடுக்கிக் கொண்டன. மாட்டு மாலுக்குள் கட்டப்பட்டிருந்த பசுக்களெல்லாம் வானை நோக்கி கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தன. மரங்களிலே பூத்துக்குலுங்கிக் கொண்டிருந்த மலர்களெல்லாம் அரைகுறை மலர்களாகவே தொங்கிக் கொண்டிருந்தன. வர்ணபகவானும் லேசாகக் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தான். நீரூற்றி வளர்த்த செடிகளெல்லாம் மழை காலத்திலேயும் வாடிப்போய்க்கிடந்தன. படுக்கையிலே அரைகுறை நித்திரையிலே இருந்தபோது இளவுசொல்லுகின்ற குரல் கேட்டது. காதுகளைக் கூர்மைப்படுத்திக் கேட்டபோது அந்தச் செய்தி காதினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுகோலாகப் பாய்ந்தது. அதுதான் மூளாய் சரவணமுத்து கிருஷ்ணசாமி (பாலு) காலமானார் என்பதாகும். அமரர் எழுபத்தி இரண்டு ஆண்டுகளாக தனக்கின்றி மற்றவர்களுக்காகவும் சைவத் தமிழுக்காகவும், ஊன் உறக்கமின்றி ஓயாது ஒலித்துக் கொண்டிருந்த அந்தப் பெருமனிதனின் இதய ஒலி தமிழ் கார்த்திகை ஆறாம் திகதி அபரபட்ஷ தசமித்திதியிலே நிரந்தரமாகவே ஓய்ந்து போகவே உயர்திரு.சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் வரலாறும் முற்றுப் பெற்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணிற் பிறந்தது மண்ணுடன் போக
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க!

## எண்ணச் சிதறல்கள்

"ஈங்கின்று நாமெல்லாம் ஏக்கமுற்று தவிப்பதற்கோ
தீங்கறியாத் திருமகன்நீர் திருநீற்றில் கலந்திட்டீர்"

## மனைவியாரின் மனக்கலக்கம்

மாங்கல்யமிட்டு எனை மனைவியென்று ஏற்றவரே
பூங்குயில் சோடியதாய் பூவுலகில் திகழ்ந்தவரே
தேங்கிநின்ற அன்பதனால் திரவியங்கள் அளித்தவரே
பாங்கிலுயர்பிள்ளைகட்கு தாயாக்கி வைத்தவரே
ஓங்கிவரும் வாழ்க்கைக்கு ஒளிவிளக்காய் நின்றவரே
தாங்கியெமை வாழ்க்கையிலே தரமுயன்று வைத்தவரே
ஈங்கின்று நாமெல்லாம் ஏக்கமுற்றுத் தவிப்பதற்கோ
தீங்கறியாத் திருமகன் நீர் திருநீற்றில் கலந்திட்டீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிற்கதியாய் விட்டின்று நீர் மட்டும் போனதென்ன
சொர்க்கத்தின் கதவுமக்கு திறந்ததுவோ சென்றிட்டீர்"

## பிள்ளைகளின் பேதலிப்பு

பெற்றெடுத்த நாள்முதலாய்ப் பேணியெமைக் காத்து வந்தீர்
கற்றவராய் வாழ்கவென்று கனகல்விப் பேறளித்தீர்
உற்றதெல்லாம் உவந்தளித்து உயிரோடு கலந்திருந்தீர்
பற்றோடு பாசமதை பகலிரவாய் ஊட்டிவிட்டீர்
பொற்பதத்தை நேரா ன பாதையிலே தினம் பதித்தீர்
அற்புதமாய் அதிலெம்மை அடிவைக்க வழிசமைத்தீர்
நிற்கதியாய் விட்டின்று நீர் மட்டும் போனதென்ன
சொர்க்கத்தின் கதவுமக்கு திறந்ததுவோ சென்றிட்டீர்

"திருமகனே பெருமகனே நாம் போ ற்றும் மாமனாரே
வருகவென்று யாரழைத்தார் விடைபெற்றுச் சென்றிட்டீர்"

## மருமக்களின் மனக்கலக்கம்

அருமையுடன் பெருமை மிகு பிள்ளைகளை எமக்களித்தீர்
குருவோடு தெய்வமெனக் குறிகாட்டி நின்றிருந்தீர்
மருமக்களென்றின்றி மக்களென்றே எமைக் காத்தீர்
கருத்தாளம் மிக்க பல அறிவுரைகள் எமக்களித்தீர்
உருவத்தால் அகத்தியத்தின் ஆற்றல்களும் கொண்டிருந்தீர்
பருவத்தே பயிர் செய்யும் பக்குவமும் பகிர்ந்தளித்தீர்
திருமகனே பெருமகனே நாம் போ ற்றும் மாமனாரே
வருகவென்று யாரழைத்தார் விடைபெற்றுச் சென்றிட்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாரடித்து மக்களெல்லாம் கதறியழ எமை விடுத்து
வாரடித்த வெள்ளமென எங்கோடி மறைந்தீரோ"

## பேரப்பிள்ளைகளின் பெருந்துயரம்

பாரறியப் பாலர் என்ற பேர் சுமந்த பேரனாரே
ஊரறிய உள்ளத்தில் எமைச் சுமந்த பேரனாரே
தேரறியத் திருவறியத் தேவாரம் சொன்னவரே
காரறுத்து ஒளிகொடுத்த ஒப்பற்ற தலைவரே
போரடித்து நெற்குவித்து எமைக்காத்த கடவுளாரே
சீரறியச் சிறப்புடனே எமை வளர்த்த குருவினாரே
மாரடித்து மக்களெல்லாம் கதறியழ எமை விடுத்து
வாரடித்த வெள்ளமென எங்கோடி மறைந்தீரோ

"தப்பறியோம் தங்கமே நீ தவறித்தான் போனாயோ
இப்புவியில் எமக்கெல்லாம் சூனியமாய்ப் போனதுவோ"

## கூடிப்பிறந்தவர்கள் வாடிப்போகிறார்கள்

தொப்பிள் கொடியுறவை தொடர்ந்தென்றும் காத்தவனே
ஒப்பரிய சோதரனாய் ஊர் மடியில் தவள்ந்தவனே
கப்பிக கரிமுகன்தாழ் காலமெலாம் பணிந்தவனே
செப்பிடுமோர் வார்த்தையினால் சிறப்புக்கள் குவித்தவனே
அப்பு ஆச்சி போலெம்மை அன்றுமின்றும் மதித்தவனே
உப்பிட்டார் தம்மை உயிருள்ளவரை நினைத்தவனே
தப்பறியோம் தங்கமே நீ தவறித்தான் போனாயோ
இப்புவியில் எமக்கெல்லாம் சூனியமாய்ப் போனதுவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊருக்கும் உறவுக்கும் பிள்ளையார்சுழி நீயே
## பிரிவாற்றாது துயருறும் சகோதரி குடும்பம்.

மூளாய்பதியிலே
பிள்ளையார் சுழியோடு தம்பி முருகன் துணையோடு
என்னருமைத் தம்பியாக நீ உதித்தாய்.
நீ அக்கா எனக் கூப்பிடுகையில் எனது துன்பம் மறைந்து
புது தெம்பு தோன்றிவிடும்.
கோபம் வந்தபோதும் நேர்நின்று பேசாது
நீ விலகிப் போகும்போதே
என் குறை எனக்கு விளங்கிவிடும்.
தம்பி பலம் எனக்கிருக்கென
என் சிந்தையோடு சேர்த்து வைத்தேன்.
உன் அக்கா அழுவாவென சொல்லாது போனாயோ!
நாம் கூடிப்பிறக்க ஐயா
கோடிநாள்ச் செல்லுமையா
உன் அக்கா நான் இங்கிருக்க
எங்குநீ சென்றாய் ஐயா

அத்தான் என் சொல்லுக்கு
உன் மனசில் ஒரு மரியாதை
யான் ஏதும் சொல்லிவிட்டால்
ஒரு சிரிப்போடு ஏற்றுக்கொள்வாய்
மைத்துணன் நீ எம்மை
வழியனுப்புவாய் என இருந்தேன் .
வானிடை எழும் மின்னல் வேகத்தில்
உன் பிரிவை அறிந்து கலங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையில் பேசும்போது
அனைவரையும் ஈர்த்திடுவீர்
மேடைக்கு அலங்காரமாய்
உங்கள் கருத்துக்கள் எழில் கொஞ்சும்
எங்கள் குலம் விளங்கிட
ஒரு கல்விமான் உள்ளாரென
மேலோர் உமைப் போற்றிடவே எம் மனசு பூரிக்கும்
உங்கள் குரலை இனி எங்கு நாம் கேட்க
உங்கள் அறிவை நாம் எங்கு பெற
நாம் எல்லோரும் கல் ஒன்று தடுக்கி
மீளாமல் வீழ்ந்துவிட்டோம்.
கருணை மனத்தாலே சாவு உமக்குத் தெரிந்திருந்தும்
எம்மிடையே காட்டாமல்
பூடகப்பேச்சோடு பூமியை விட்டுப் போய்விட்டீர்

தாய்மாமன் என்று சொல்ல எமக்கு இனி
யாருமில்லைப் பூமியிலே
பிழை ஏதும் செய்துவிட்டால்
ஆசானாய் இறங்கிவந்து விளக்கம் பல கூறிடுவீர்
சமய ஆசார விழுமியத்தை
தினமும் பெருக்கிடவே
பாங்கோடு அணைத்தே பலநூறு கூறிடுவீர்
எல்லாமே கூறிய தாத்தா
நீர் போகும் நாளை ஏன் கூறவில்லை
உள்ளூர உள்ளம் ஏங்கித் தவிக்கிறதே தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தகவுடையான் பெற்றெடுத்து எனக்களித்த மருகனாரே
அகமெல்லாம் இருண்டதையா சிகரம் நீர் ஏன் சரிந்தீர்"

## மாமியாரின் மனக்கவலை

மகளாரை மணம் முடித்தீர் மாமியென்ற உறவு காத்தீர்
மிக மிகப் பொறுப்புடனே குடும்பத்தைப் பாதுகாத்தீர்
பகலிரவாய் பாடுபட்டீர் பாலகரை வளர்த்தெடுத்தீர்
விகடமாய்ப் பேசியும் நீர் வித்தைகள் பல புரிந்தீர்
புகலிடமும் நீர் கொடுத்தீர் பூட்டரையும் சுமக்க வைத்தீர்
சுகவீனம் எமக்கென்றால் சுத்தமாய் நீர் உமை மறந்தீர்
தகவுடையான் பெற்றெடுத்து எனக்களித்த மருகனாரே
அகமெல்லாம் இருண்டதையா சிகரம் நீர் ஏன் சரிந்தீர





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்ததொரு தந்தையார்

பிள்ளைகளைப் பெற்றெடுப்பதோடு ஒரு தந்தையின் கடமை முடிந்துவிடுவதில்லை அப்போதுதான் அவருடைய கடமை ஆரம்பிக்கிறது என்று சொல்லிவிடலாம். பெற்ற பிள்ளைகளை சீரோடும் சிறப்போடும் வளர்க்க வேண்டும். அவர்களுக்கு நல்ல கல்வியை ஊட்ட வேண்டும். அவர்கள் நல்ல திடகாத்திரமான உடலைப் பெறுவதற்கு உணவளிக்க வேண்டும். ஒழுக்கத்திலே, பண்பாட்டிலே சிறந்தவர்களாக அவர்களை ஆக்கவேண்டும். ஏதாவது ஒரு வித்தகம் ஒன்றினை அவர்கள் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேற்படிப்பிற்கு அவர்களை இட்டுச் செல்ல வேண்டும். கல்வியிலே அவர்கள் மேம்பட்டிருக்கும் போது அவர்களுக்கு ஏதாவது ஓர் உத்தியோக வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வாழ்கையிலே அவர்களை இறை நம்பிக்கை உடையவர்களாகவும் ஆத்மீக பலம் நிரம்பியவர்களாகவும் ஆக்குவதற்கு அரும்பாடு படவேண்டும். பின்னால்

அவர்களுக்கு நல்ல இல்வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டும். இப்படியான கடமைகளை ஒரு தந்தையார் தன் பிள்ளைகளுக்கு ஆற்றுகின்றபோது அவர் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்கின்ற தன்மைக்குள் சென்றுவிடுகிறார். அது ஊன் உறக்கமின்றி தன்னை ஒறுத்து பிள்ளைகளை மேம்படுத்துகின்ற தியாக வாழ்க்கையாகும். அத்தகைய ஒரு வாழ்க்கை வாழ்ந்தவர்களுக்கு உதாரணமானதோர் தந்தையார் தான் அமரர் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களாவார். எனவே தந்தையர்களும் தந்தையார்களாக ஆகாப்போகிறவர்களும் அமரர் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களுடைய கடமைப் பரினாமங்களையும் முதிர்ச்சியையும் முடிவினையும் அறிந்துகொள்வது எங்களையும் ஓர் சிறந்த தந்தையார் என்ற வட்டத்துக்குள் இழுத்துச் செல்லும் என்று நம்புவோமாக.

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நின்மதி நின்மதி இவ்விடம் சூழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

வரலாற்று விழுமியங்களுடன் வளங்கள் பல கொண்ட வலிகாமம் மேற்று பிரதேசத்தில் மூளாய் என்னும் அழகிய கிராமத்தில் பிறந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபதமடைந்த அமரர் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் பிரிவு மிகப்பெரிய பேரிழப்பாகும். இவர் தான் வாழ்ந்த காலத்தில் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர், முத்துக்குமார சுவாமிகள் மீது அதீத பக்தி கொண்டவர். இவர் விநாயகப்பெருமானையும் முருகப் பெருமானையும் தனது இரண்டு கண்கள் போன்று பக்தி செலுத்தியவர். ஆலயங்களில் இடம்பெறும் அனைத்து விழாக்களிலும் தன்னால் இயன்ற பணிகளை ஆற்றியதோடு அவ்வாறு திருப்பணி புரிய வழிகாட்டியவர். கூட்டுப்பஜனை செய்தல், தாகசாந்தி அமைத்தல், மாசிமாத வெள்ளிக்கிழமை பஜனை, உபயம் செய்பவராகவும், திருவெம்பாவை மணிவாசகர் ஊர்வலம், திருவாசகம் முற்றோதல், கந்தசட்டி விரத காலத்தில் கந்த புராணம், கந்தசட்டி கவசம், இசைத்தல், பூமாலை தொடுத்தல், ஆலய உட்புற வெளிப்புற சுத்தம் செய்தல், திருமுறை ஓதுதல் எனப் பல்வேறு தொண்டுகள் ஆற்றியவராவார்.

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்கி தனது வாழ்நாட்களில் பெரும்பகுதியினை ஆலய திருப்பணிகளுக்காகவும், சமூக சேவகராகவும் வாழ்ந்து முடித்த கிருஷ்ணசாமி (பாலு) அவர்களின் திடீர் மரணத்தால் அதிர்சியுற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரின் திருவடிகளை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

சி.ஜெயானந்தசர்மா
பிரதம அர்ச்சகர்
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் ஆத்மாவிற்காக ஆத்மார்த்தமான பிரார்த்தனைகள்

வதிரன்புலவோனின் திருவாசலில் நிறைவாழ்க்கை வாழ்ந்தவர் தாங்கள் தமது பூதவுடல் மறைவு கண்டு மனத்துயர் உற்றவரில் நானும் அடக்கம். என் அம்மா தங்களின் தனித்தமிழின் திறன் பற்றி அடிக்கடி சொல்வர். அதனால் தம்மீதும் வெளிப்பாயும் தமிழ் மீதும் தனித்துவமான மதிப்பொன்று என்றுமே இருந்தது. தம் மக்களும் என் பாலியப் பராய சிநேகிதர்களாவர். ஆதலால் அவர்களின் துயரம் போல் எனக்குமுண்டு ஆதலால் தமது துயரை துடைக்கவும், தன் ஆன்மாவை இரட்சிக்கவும் தும்பிக்கையான் திருக்கை துணையாகட்டும்.

**சிவசிறி தியாக உமாசுதக்குருக்கள்**
**பிரதமகுரு ஈழத்துச் சிதம்பரம்**
**காரைநகர்.**

தென்றலின் பூக்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம்மனங்களிலிருந்து நீங்காத பாலு அண்ணை

## மூளாய் இந்து இளைஞர் மன்றம்

இந்தப் பாரினிலே பிறந்த அனைவருமே மடிவது என்பது இயற்கை எனினும் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களுடைய இழப்பு எமக்கெல்லாம் ஓர் பேரிழப்பாகும். எல்லோரும் அவரை அன்பாக "பாலு அண்ணை" என்றே அழைப்போம். எப்போதும் சிரித்த முகத்தோடு வலம் வருவார்.

பாலு அண்ணை எமது மன்ற முன்னாள் உறுப்பினராகவும், நிர்வாக உறுப்பினராகவும் திகழ்ந்த ஒருவர். எமது மன்ற போஷகராகவும் செயற்பட்டவர். இவர் எமக்கு மன்ற ஆரம்பகால செயற்பாடுகளையும் கடந்த கால அனுபவங்களையும் எப்பொழுதும் கூறுவார்.

எம்மை எங்கு கண்டாலும் அழைத்து கதைப்பார். கதைக்கும் பொழுது நெற்றியைப் பார்த்துவிட்டு "நீறில்லா நெற்றி பாழ்" என்று சொல்லி விபூதியை அணிவித்து விடும் அளவிற்கு எம்மீது அன்பும் அக்கறையும் உடையவராக செயற்பட்ட மனிதர். ஆலயத்திலே அமைதியை பேணும்படி கண்டிப்புடனும் ஒருவருடைய மனமும் புண்படா வண்ணம் சொல்லுவார். பாலு அண்ணை சொன்னால் அனைவரும் கேட்டு நடப்பார்கள் என்பதே குறிப்பிடத்தக்க விடயம் திருவிழாக் காலங்களாக இருந்தாலும் சாதாரண நாட்களிலும் பிரசாதத்தை பகிர்ந்தளிப்பது அவருடைய பொறுப்பாகவே இருந்தது.பிரசாத தட்டை எடுத்து உடனே சிவசிவ என்று சொல்லித் தன் தலையில் குட்டி விட்டுத்தான் தொடங்குவார். அந்த அளவிற்கு பண்பும் இறை சிந்தனையும் உடைய ஓர் மனிதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் திருவெம்பாவை 9ம் நாள் இரவு தானாகவே முன்வந்து எம்மை எல்லாம் அழைத்து ஓர் ஊர்வலம் வருவார். அவ்வேளை எமது கிராமத்திலுள்ள அனைத்து கோவில்களையும் தரிசித்து காலை 10ம் நாள் பூசைக்கு ஏற்ற வண்ணம் ஊர்வலத்தை முடிப்பார்.

இவ்வாறு அவர் செய்த சேவைகளையும் அவருடைய பண்புகளையும் அடுக்கிக்கொண்டே செல்லலாம். இவருடைய இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. அப்படிப்பட்ட ஓர் மனிதர் எம்மை விட்டுப் பிரிந்தது எமக்கு மிக மன வேதனையைத் தருகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய் இந்து இளைஞர் மன்றம் சார்பாக
ப.சாரங்கன்

சந்தணம் தொட்டு நாம் போட்டிடும் போதும்
திருநீற்றின் கீற்றொளி துலங்கிடும் போதும்
பிரசாத தட்டுக்கள் கண்படும் போதும்
பாலுவண்ணர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரப்பட வேண்டிய பணிகள்

யாழ்ப்பாணத்தில் மூளாய் என்ற கிராமத்தினை எவரேனும் உச்சரிக்கின்ற போது மற்றொரு நினைவுக்கு வருவது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும், மூளாய் மேற்கு ஐக்கியநாணய சங்கமும் ஆகும். அந்த அளவுக்கு சமூக பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை ஒரு அரசு சாராச் சங்கமொன்று அங்கிருந்து சாதித்து இருக்கின்றது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. அச்சங்கத்தின் தூண்களில் ஒருவரான அமரர் திரு.சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் இறப்பு யாழ் சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

தற்காலங்களில் இத்தகைய சமூக அற்பணிப்பும் சேவை மனோபாவமும் உள்ளவர்களைப் பார்ப்பது அரிதாகி வருவதும் மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப மக்கள் தமது சமூக பண்பாட்டு விழுமியங்களில் இருந்து அன்னியப்பட்டு நுகர்வு கலாச்சாரத்தில் உள்வாங்கப்பட்டுச் செல்வதும் யாழ்ப்பாணக் கிராமங்கள் தமது தனித்துவப் பண்புகளை இழந்து வெறிதாகி வருவதுமான சூழலில் அமரர் திரு.கிருஷ்ணசாமி அவர்களின் இழப்பு நம்மை துயருறச் செய்கிறது.

கிராம தன்னிறைவு சார்ந்த விடயங்களில் மூளாய் ஐக்கியநாணய சங்கம் உட்பட யாழ்மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவு சங்ககங்களின் சமாசத்தினதும் அதன் இயக்குநர்களினதும் அக்கறை ஏனையோரால் மேலும் வளர்த்தெடுக்கப்பட நீண்டகால யாழ்ப்பாண தமிழ்ப்பாரம்பரியத்தை உற்று நோக்கும்போது இத்தகைய பெரியார்கள் யாழ் மண்ணில் இயங்குவிசையும் ஆத்மாவையும் தீர்மானிக்கும் அடையாளப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் மூளாயில் அமரர் திரு.கிருஷ்ணசாமி அவர்களின் பணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். "சொர்க்கம் கிடைக்காத குறையை ஈடுசெய்யக் கிடைத்த பரிசு அன்பு மனைவி" நல்ல கணவனைஉருவாக்கும் மனைவி ஒரு மேதை என்பர். தன் கணவனை புடம்போட்டு ஜொலிக்க வைக்க ஒரு தீர்க்க தர்ச மனைவியால் மாத்திரமே முடியும்.

நீ இறக்கும் போது கடவுள் உனக்கு கடன்பட்டவனாக இருக்கும்படி நீ வாழ வேண்டும். இது ஆன்றோர் முதுமொழி.மூளாய் சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமி ஆலய முன்றலில் சமூக சேவைகளுடன் இறை தொண்டும் செய்து திரு.கிருஷ்ணசாமி வாழ்ந்தார் என்று துணிந்து கூறலாம். ஆண்டவரின் காலடியில் நீண்ட துயில் கொள்ளும் உங்கள் ஆத்மா சாந்தி கொள்ள பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இ.த.விக்கியராஜா
(ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி)
12.12.2019





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

தன்னைப்போல சகலமும் ஓம்புக
விண்ணைப்போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போல காக்க அறத்தை - சிவயோக சுவாமிகள்

# என்றும் மறக்க முடியாத பாலு அண்ணை

எமக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து பாலு அண்ணையைத் தெரியும். பிள்ளையார் முருகன் கோயிலில் அவரது தொண்டு என்றும் நினைவுக்கு வரும். வெள்ளிக்கிழமை பஜனையில் அவருடைய பாட்டுக்களை மறக்க முடியாது.

1984 களில் மூளாய் இந்து இளைஞர் மன்றத்துடன் எமது இந்து சமய மன்றம் இணைந்த காலங்களிலும் அதற்கு முன்பும் எமது போஷகராக இருந்து வழிநடத்தியவர். தமிழிலும் சைவத்திலும் மாறாத பற்றுடைய அவருடய பணிகள் எம்மால் சொல்ல முடியாது. தேர்த்திருவிழாக்களின் போதும் தீர்த்தத்தின் போதும் நாம் முன்பு ஏற்பாடு செய்த தூபம் போடும் பணியை அவரது குடும்பத்தவர் இன்றும் தொடர்வதை மறக்கமுடியாது. மகோற்சவங்களின் போது அன்னதானமிட்டதை மறக்க முடியாது. ஒரு தடவை ஆண்டு ஞாபகத்திற்கு வரவில்லை தேருக்கு முதல்நாள் இரவு பௌத்த பிக்கு ஒருவர் பாத நடையாக காரைநகருக்குச் சென்றவரை ஆஸ்பத்திரியடியில் இருக்கின்ற கடற்படையினர் போகவிடாது தடுத்தமையால் அவர் திரும்பி கோவிலடிக்கு வந்த போது எங்கள் வீட்டில் அவரைத் தங்க வைத்து அடுத்தநாள் அவரை அனுப்பி வைத்தோம். மதியம் ஒருவேளை உணவு உட்கொள்ளும் அவருக்கு தேர் நிறைவடைய பாலு அண்ணன் வீட்டில் உணவருந்தியபின் தம்பி விபுலன் அவரை சித்தன்கேணியில் கொண்டுபோய் விட்டதை மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிமலை ஐயப்ப விரதம் கார்த்திகை மாதம் தொடங்கினால் அவரது வீட்டில் ஒவ்வொரு நாளும் நடக்கும் பஜனை மறக்கமுடியாத பேரின்பத்தை தரும். ரவி குருசாமி வந்தபோது அருமையான பூசை ஏற்பாடுகளைச் செய்து கட்டுவன் ஐயா அம்மா பிள்ளைகள் என எல்லோரும் வந்து அந்த நாள் இரவு நடந்த அத்தனை நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு அவர் ஓடியாடி எல்லா விடயங்களையும் நிறைவேற்றிய பாங்கு எழுத்தில் வடிக்க முடியாதது. தன்னைப்போலவே தனது குடும்பத்தவரையும் அவர் பொதுப்பணிகளில் ஈடுபட வைத்ததும் ஊறறியும். எனது பெயரை தங்கமுகுந்தன் என ஊரறிய வைத்தவரும் அவரே வருடந்தோறும் மார்கழிமாத பஜனையில் கடும் குளிரைப் பொருட்படுத்தாது இளையோர்களை வழிப்படுத்தி ஊர்முழுக்க இரவு பூராகவும் சுற்றிவருவதை இனி யார் பொறுப்பேற்கப்போகிறார்களோ தெரியவில்லை. புத்திரர்கள் இருவரும் என்னிடம் இவ்வருடத்தில் பங்கு கொள்ள அழைப்பு விட்டுள்ளார்கள்.

ஊரிலும் சரி அயல் ஊரிலும் சரி தன் உடல்நிலை பாராது எந்த நேரத்திலும் இறுதிக்கிரிகைகளில் பங்கு பற்றி திருமுறை ஓதலுடன் தான் எப்போதும் தன் கைவசம் வைத்திருக்கும் திருப்பொற்சுண்ணம் பிரதியுடன் பங்கு கொள்வதை மறக்கமுடியாது. இறுதியாக அவரை வைத்தியசாலையில் பார்த்த போது ஏதோ சொல்லவந்தவரால் பேச முடியவில்லை. மகன் கணாவின் வேண்டுகோளுக்கமைய அவருக்கு சபரிமலை தர்மசாஸ்தாவின் விபூதியைப் பூசினேன். 22ம் திகதி அதிகாலை 5.00 மணி பேரூந்தில் சென்றபோது அவரது பிரிவு பற்றிய செய்தி கிடைத்தது. கார்த்திகை மாதம் அபரபக்க தசமித்திதியில் ஶ்ரீகரிகர புத்திரனின் உத்தர நட்சத்திரத்தில் மெய்பொருள் நாயனார் குருபூசை தினத்தில் அவரது ஆத்மா பரமனடி சேர்ந்தது. அவரது ஆத்மா கயிலை மலையானது கழல்களில் சாகித்ய முத்தி பெறுவதாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் மறவாத
தங்கமுகுந்தன்
மூளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நலனிற்கும் அரும் பாடுபட்ட கூட்டுறவாளன்

சிவபூமி எனப் போற்றப்படும் எமது கிராமத்தில் வதிரன்புலோவாக விளங்கும் யாழ்மாவட்டத்தில் மூளாய் எனும் ஊரில் தோன்றியவரே பாலபண்டிதர் அமரர் திரு.ச.கிருஷ்ணசாமி அவர்கள். இவர் இவுலகை விட்டு நீங்கிய செய்தி மக்களை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. இவர் ஆரம்பக் கல்வியை மூளாயிலும் பின் சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்று பின்பு பாலபண்டிதர் பயின்றும் தனது தொழிலை விவசாயமாக்கியும் கொண்டார்.

1908ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் உருவாக்கப்பட்ட கூட்டுறவை கல்வி படைத்த முன்னோர்கள் எங்கள் கிராமத்தில் 15.02.1929ம் ஆண்டில் மூளாய் மேற்கு ஐக்கிய நாணயசங்கத்தை ஏழைகளுக்கும் யாவருக்கும் உருவாக்கி விட்டார்கள். இச் சங்கத்தில் 1980ம் ஆண்டு அங்கத்தவராக இருக்கும் பொழுது நிர்வாகத்திலும் நாடானது பிரச்சினையால் சீரழிந்த நேரத்தில் சங்க அங்கத்தவர்களை உருவாக்கி 2004ம் ஆண்டு கூட்டுறவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மறுசீரமைத்து அன்று தொடக்கம் முதியோர் என்ற முறையில் தலைவராக இந்நாள்வரையும் கடமையாற்றியதோடு சங்கத்தின் கட்டட நிதியாக தேசிய சேமிப்பு வங்கியில் ரூபா 250,000 நிரந்தர வைப்பில் சங்கத்தினூடாக உருவாக்கியுள்ளார்.

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமியின் அடிமையாகவும் ஆலயத் தொண்டனாகவும் திகழ்ந்த அன்னார் திருவெம்பாவை உற்சவத்தில் கலந்து கொள்வதில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். விபூதி அணிந்த சிவக்கோலத்துடன் காட்சியளிக்கும் இவர் சைவசமயத்தின் முன்னோடியாகவும் வாய்மையே வாழ்வின் வழியாகவும் கொண்டு வாழ்ந்த ஒருவராவார்.

அன்னார் யாவருமே எதிர்பாராத வண்ணம் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் தவிக்க வைத்துவிட்டு இறையடி நிழல் எய்தினார். அமரரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்

மூளாய் மேற்கு

ஐக்கிய நாணய சங்கத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

சரவணமுத்து கிருஷ்ணசாமி (பால்ஐயா) சிறந்த நற்பண்புகளும் இரக்க குணங்களும் ஒழுக்க நெறியும் நிறைந்த ஒரு சிறந்த மனிதர். அவருடன் பழகக் கிடைத்ததை மாபெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அவரின் குடும்பத்தவரும் இவரைப்போல நற்பண்புள்ள குரு விசுவாசிகள். இவர் பாலபண்டிதரும் சிறந்த குரு விசுவாசியுமாவார். ஆலய தேவைகளுக்கும் வீட்டிற்கும் பால் தருவதால் அவரைச் செல்லமாக பால் ஐயா என்று அழைத்து இன்புற்று வந்தேன். காலையில் வீட்டிற்கு வருவார். அவருடன் சிறிது நேரம் நகைச்சுவையாகக் கதைத்து எனது காலைப் பொழுதை இனிமையாக ஆரம்பித்திருக்கின்றேன். அந்தக் காலம் திரும்பி வராது என நானும் எனது குடும்பத்தினரும் ஏங்கித் தவித்திருக்கின்றேம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா மேலான சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எல்லாம் அவன் செயலே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்
சிவஸ்ரீ.பா.பாலகுமாரக்குருக்கள்
ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான பிரதம குரு
மூளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாயூரின் மூத்த சைவத்தமிழ் ஆர்வலர்
## அமரர்
## உயர்திரு.சரவணமுத்து கிருஷ்ணசாமி (பாலு) அவர்கள்

சைவத்தமிழ் வளர்க்கச் சபைபலதும் புதுந்து வந்தீர்
மெய்வருந்தி மேதினியில் மேன்மைபல கண்டு வந்தீர்
தெய்வத் திருமகனே கிருஷ்ணசாமி அண்ணா உமை
வையகம் உள்ளவரை வணாங்கி நாங்கள் நினைவுகூர்வோம்.!

வள்ளிக் குமரன்தன் வீதியிலே வாழ்ந்து வந்தீர்
அள்ளித்தினம் திருநீறும் சந்தணமும் அணிந்திருந்தீர்
உள்ளத்தால் உயர்ந்திருந்த கிருஷ்ணசாமி அண்ணா உமை
மெள்ளத் திறந்த நெஞ்சுள் அமர்த்தி நாங்கள் நினைவுகூர்வோம்

வதிரன் புலோவானின் பணிக்கெனவே வந்துதித்தீர்
புதிர்பூத்தான் சபைதனிலே பதவிபல நீர் வகித்தீர்
முதிர்ஞானப் பக்திகொண்ட கிருஷ்ணசாமி அண்ணா உமை
உதிரத்தில் கலந்து நாங்கள் உள்ளத்தால் நினைவுகூர்வோம்.

இறைகிரிகை அனைத்திலும் நீர் தோத்திரங்கள் பாடிவந்தீர்
முறையோடு ஆத்மீகக் கிரிகைகளும் நடத்திவைத்தீர்
துறைபலதின் திறன்கொண்ட கிருஷ்ணசாமி அண்ணா உமை
பிறைசூடி மகன் மடியில் தினம் நாங்கள் நினைவு கூர்வோம்!

சங்கங்கள் சபைகளெல்லாம் மங்காத பணி புரிந்தீர்
பொங்குமருள் ஊர்க்கோயில் பூசைகட்கும் துணைபுரிந்தீர்
தங்குமருள் தனைச் சுமந்தீர் கிருஷ்ணசாமி அண்ணா உமை
திங்களெல்லாம் திருவரங்கம் ஏற்றி நாங்கள் நினைவு கூர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழியில் ஊர்கழிக்கத் திருவெம்பாத் தேரிழுத்தீர்
பார்செளிக்க ஏர்பிடித்து எமக்கெல்லாம் உணவளித்தீர்
பேர்சுமக்கும் மக்களீன்றீர் கிருஷ்ணசாமி அண்ணா உமை
ஊர்உலகம் உள்ளவரை உள்ளத்தால் நினைவு கூர்வோம்

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்து உறவுகட்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தானம்
மூளாய்

அமரர் அவர்களை
என்றும் நினைவு கூரும்
(பரிபாலனசபையினர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

வாழ்க்கைச் சக்கரத்தில் பிறப்புக்கள் என்பதை உணர்ந்தவர்களுக்கும் அதை நம்புபவர்களுக்கும் இறப்பு என்பது ஒரு கவலைக்குரிய விடயமன்று. இறைவனை நோக்கிப் பயணிக்க இருப்பவர்கள் இறப்பிற்காக மகிழ்ச்சி அடைகின்றார்கள். மீண்டும் மீண்டும் பிறந்து உழல இருப்பவர்கள் இறப்பிற்காக அஞ்சுகின்றார்கள். ஆதலினால் நாங்கள் வாழ்கின்ற காலத்திலேயே இறைவனை நோக்கிப் பயணிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வோமேயானால் இறப்பும் மிக மிக மகிழ்ச்சியான தொன்றேயாகும். ஏனென்றால் இறப்பு என்ற பாதையினூடாக நாங்கள் செல்வது இறைவனிடமல்லவா எனவே வாழ்கின்ற காலத்திலேயே இறைவனை நோக்கிப் பயணிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு இறந்தவர்களுக்காக நாம் வருந்துவதும் துயரப்படுவதும் அவர் இறைவனை அடைகின்ற காலத்தை தாமதப்படுத்தும் என்று அறிந்து ஆறித் தேறி மகிழ்ச்சியோடு வாழ்ந்து அவர் இறைவனை விரைவா க அடைய துணை புரிவோமாக.

தனிமகனாய்த் தான் பிறந்து தன் குடும்பம் தனைக் காத்து
மனிதத்தின் மகத்துவத்தை மனதாரக் கடைப்பிடித்து
புனிதத்தை பொலியவைத்து புண்ணியங்கள் பல புரிந்து
இனியவராய் வாழ்ந்த உங்கள் தலைவனார் கிருஷ்ணசாமி
கனிவா ன உடல்விடுத்து கானகத்தில் புகுந்ததனால்
அநியாயம் இதுவென்று அலறி அலறிக் கரைந்தீடாதீர்
இனி அவர் இருக்கும் இடம் சொர்க்கலோகம் என்றறிந்து
நனிசிறந்தே நாளும் நீர் தேற்றமுற்று வாழ்ந்திடுவீர்

போனவர் போகட்டும் பொன்னுடலைப் பணிவோம்
ஆனமட்டும் அவர்போல வாழ்ந்திடவே முயல்வோம்
நானவர்போல் நீரவர்போல் நாமொருநாள் போவோம்
கானகத்தில் இருப்பார் அவரைக் கண்டு நாங்கள் மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர் உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் ஆத்மீக வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்**

வாழிநம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வேலோன் வாழி
நண்ணியிறை பூசை செய்யும் அந்தணர்கள் வாழி
நறும்சமய நெறிவளர்க்கும் பெரியோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி
ஏற்றமுறக் கேட்டருளும் அன்பர் வாழி
வாழிநம் வதிரன்புலோத் தலமூர் வாழி
வளர்சமய நெறி வாழி வாழி வாழி!


**அமரர் உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் அனைத்து ஆத்மீகக் கிரிகைகளிலும் கலந்து கொண்ட அனைவர்க்கும் மங்களம் உண்டாகட்டும்**

கிருஷ்ணசாமி என்றதொரு ஆத்மனார்க்கு மங்களம்
அருமையோடு அவருறவைக் காத்தவர்க்கு மங்களம்
பெருந்தகையோன் பிரிவு கேட்டு திரண்டவர்க்கு மங்களம்
வருத்தமுற்று வந்து கண்ணீர் சிந்தியோர்க்கு மங்களம்
உருக்கமுற உரைகளாற்றிப் பாடியோர்க்கு மங்களம்
நெருக்கமுற வந்தவரைச் சுமந்தவர்க்கு மங்களம்
மருத்துவங்கள் செய்தவர்க்கு உதவியோர்க்கு மங்களம்
பொருத்தமான வேளை துயர் பகிர்ந்தவர்க்கு மங்களம்
திருக்கரத்துள் அவர் நினைவை சுமப்பவர்க்கு மங்களம்
குருவினாராய் அவரை எண்ணி மதித்தவர்க்கு மங்களம்
மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்
ஒருவரையும் நாம் மறவோம் அனைவருக்கும் மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்களின் வம்சாவழி




*அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்

எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய குடும்பத்தலைவர் அமரர் சரவணமுத்து கிருஷ்ணசாமி அவர்கள் இவ்வுலகிலே வாழ்வியலை மேற்கொண்ட காலத்திலே அவரை அன்போடு நேசித்துப் பழகியோர்கும், அவர் சுகவீனமுற்றிருந்த காலத்திலே அவருக்கு வைத்திய உதவிகள் புரிந்தவர்கட்கும், நலம் விசாரித்து ஆறுதல் கூறியவர்கட்கும், அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆகவேண்டிய அனைத்து உதவிகள் புரிந்தவர்கட்கும் இறுதிக்கிரிகைகளிலே பெருந்திரளாகக் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும், மலர் வளையங்கள் மூலமும், தொடர்புசாதனங்கள் மூலமும், அனுதாபம் தெரிவித்து மரியாதை செலுத்தியோருக்கும், இறுதிக்கிரிகைகளிலே தேவாரம்பாடி உரைகளாற்றி உருக்கமுற வைத்தோர்க்கும், இறுதி ஊர்வலத்தில் மயாணம் வரை வந்து ஆறுதல் அளித்தோருக்கும், தொடர்ந்து நடைபெற்ற ஆத்மீகக் கிரிகைகளிலே பங்கெடுத்து எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்கு உதவியோருக்கும், கடந்த முப்பது நாட்களாக எமது துன்ப துயரங்களை அறிந்து பலவிதமான உதவிகளைப் புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்கெடுத்து அன்பு செய்தோர்க்கும், வெளிநாட்டில் வசிக்கின்ற எமது சகோதரி மைத்துனரின் இல்லம் சென்று அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மற்றும் எல்லா வழிகளிலும் எல்லா உதவிகளும் புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும், நாம் எமது காலத்தால் அழியாத நன்றிகளையும் கடமைப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றிகள் பலகோடி

இங்ஙனம்

நன்றியோடு அமரர் அவர்களின் குடும்பத்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாமிஜம்

நன்றி மறவாத வாழ்க்கையை வாழுங்கள்
நாழும் பொழுதும் நல்லோனாய் நடவுங்கள்
நினைவிலும் கனவிலும் படைத்தவனை எண்ணுங்கள்
நீறுபூசும் பழக்கத்தை நித்தியமாக்குங்கள்
நுட்பத்தினோடணுகி மனங்களை வென்றிடுங்கள்
நூதனம் ஒன்றுமில்லை நேர்மையோடு வாழுங்கள்
நெறியோடு வாழ்கின்ற வழிவழியே செல்லுங்கள்
நேர்மைக்கே இறுதி வெற்றி என்றறிந்து நடவுங்கள்
நையாண்டி நமக்கேதான் கேடாகும் தெரிந்திடுங்கள்
நொந்தாரைத் தேடிப்போய் உதவுகரம் நீட்டுங்கள்
நோவலினால்  விளைவது பெருந்துன்பம் உணருங்கள்
ந்(இ)திரனாய்ச் சந்திரனாய் இங்கேயே வாழ்ந்திடலாம்.

இதுவே என் வாழ்க்கைப் பயணத்தின்
எச்சங்களும் சாராம்சமுமாகும்.
இங்ஙனம்
சரவணமுத்து கிருஷ்ணசாமி (பாலு)

சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை. 0776915339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org